குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 129 /2012

அ.சா. 1

2023–ம் ஆண்டு நவம்பர் 21–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 1–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரேம்நாத் | ஜாதி | |
| தந்தை பெயர் | ராமநாதன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மாலை 5.19 மணி,

Accused Pannerselvam Present. APP is Mr.M.Suresh present.

**முதல் விசாரணை.**

1. நான் சேலம் அஸ்தம்பட்டியில் காந்திரோட்டில் குடியிருந்து கொண்டு முதல் அக்கரகாரத்தில் கோயம்புத்தூர் ஜீவ்லர்ஸ் என்ற பெயரில் நகைகடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரி சம்பவ காலத்தில் எனது கடையில் நகை உதவியாளராக வேலை செய்து வந்தார். தேதி நினைவில்லை கடந்த 2012 ம் ஆண்டு கேரளா மாநிலம் திருவணந்த புரத்தில் உள்ள பீமா ஜீவ்லர்ஸ் என்ற நகை கடையில் இருந்து எங்களுக்கு சேர வேண்டிய 2 1/2 கிலோ தங்க கட்டியை வாங்கி வருமாறு ஆஜர் எதிரியை அனுப்பி வைத்தேன்.

2. அவர் அந்த 2 1/2 கிலோ தங்கத்தை பெற்றுக் கொண்டு திருவனந்தபுரத்தில் இருந்து கல்லடா டிராவல்ஸ் என்ற ஆம்னி பேருந்தில் ஏறி சேலம் வந்த போது அவர் தூங்கி விட்டதாகவும் அந்த பேருந்தில் யாரோ அந்த 2 1/2 கிலோ தங்கத்தை திருடி விட்டதாகவும் எங்களுக்கு அழைபேசி மூலம் தகவல் தெரிவித்தார். அவர் வந்த பேருந்து ஓமலூர் அருகே வந்து கொண்டிருப்பதாக சொன்னார். எனவே நான் அவரை ஓமலூர் காவல் நிலையத்தில் தகவல் அளிக்க சொன்னேன்.

3. அதன்பின்பு நான் ஓமலூர் காவல் நிலையத்திற்கு வந்தேன். போலீஸார் ஆஜர்

எதிரி பயனம் செய்த பேருந்தை அதில் இருந்த பயணிகளின் உடைமைகளை சோதனை செய்து பார்ததில் தங்க கட்டி கிடைக்கவில்லை. அதன்பின்பு நான் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. அதன்பின்பு போலீஸார் ஆஜர் எதிரி பன்னீர்செல்வத்தை பலமுறை அழைத்து விசாரித்தார்கள். அதில் மேற்படி 2 1/2 கிலோ தங்க கட்டியை ஆஜர் எதிரி திருடியது தெரிய வந்தது. அதன்பின்பு போலீஸார் என்னை அழைத்ததின் பேரில் காவல் நிலையம் சென்று போலீஸார் எதிரியிடம் இருந்து கை பற்றி வைத்திருந்த தங்கத்தை நான் அடையாளம் காட்டினேன். அதன் பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து தங்கத்தை திரும்ப பெற்றுக் கொண்டேன்.

5. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க கட்டிகள் என்னுடையது அதை தான் நான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக் கொண்டேன். (**மேற்படி தங்க கட்டிகளின் புகைபடங்கள் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (6 புகைப்படங்கள்**)). போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை

**மறு விசாரணை**.இல்லை.

விசாரணை முடிந்த நேரம்: மாலை 5.35 .மணி,

ஓம்/-ச.ஷர்மிளா,.

குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்